Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, SEPTEMBER 01, 2025

திங்கட்கிழமை 01, செப்டெம்பர் 2025 | ஒளி: 11 கதிர் 040 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE



# 'இரத்த நிலவை' காணலாம்

வானியல் ஆர்வலர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கும் அரிய நிகழ்வு, 'ஃப்ளட் மூன்'. 2025 செப்டம்பர் 7 அன்று நிகழும் மொத்த சந்திர கிரகணத்தால் நிலவு ஆழ்ந்த சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கும். 2025 செப்டம்பர் 7 மற்றும் 8ஆம் திகதிகளில், வானில் கண்கவர் நிகழ்வாக, நிலவு ஆழ்ந்த ரத்தச் சிவப்பு நிறத்தில் காட்சியளிக்க உள்ளது.

இது, ஃப்ளட் மூன் என அழைக்கப்படும் முழுமையான சந்திர கிரகண நிகழ்வு.

தொடர்ச்சி P2



## மனிதப் புதைகுழிகள் தொடர்பில்

# சுயாதீன விசாரணை வேண்டும்

இலங்கையில், அண்மையில் மனிதப் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்ட சிறுவர்கள் உள்ளிட்ட பலரின் மனித என்புக்கூடுகள் மற்றும் தனிப்பட்ட உடைமைகள் என்பன கடந்த கால மனித உரிமை மீறல்களின் அளவையும், நம்பகமான, வெளிப்படையான மற்றும் சுயாதீன விசாரணைகளுக்கான அவசரத் தேவையையும் வலியுறுத்துகின்றன என்று இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிராஞ்ச் தெரிவித்துள்ளார்.

சர்வதேச காணாமல்போனோர் தினமான நேரூர் அறிக்கையொன்றை வெளியிட்டு, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச காணாமல்போனோர் தினம் அனைத்து பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நினைவை மதிக்கும் ஒரு நாள் என்றும், சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் கீழ் இந்த மீறலை ஒருபோதும் பொறுத்துக்கொள்ளவோ, மன்னிக்கவோ அல்லது மறக்கவோ கூடாது என்பதை நினைவூட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீதி, உண்மை மற்றும் இழப்பீடுகள் ஆகியவை நல்லிணக்கம், நிறுவனங்கள் மீதான நம்பிக்கை மற்றும் இலங்கையர்கள் நீண்டகாலமாகத் தேடிக்கொண்டிருக்கும் நிலையான அமைதியின் பிரிக்க முடியாத அடித்தளங்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

# ரணில் 6ஆம் திகதி விசேட அறிவிப்பு



கொழும்பு தேசிய மருத்துவமனையில் இருந்து, வெள்ளிக்கிழமை(29) அன்று வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் 6ஆம் திகதி விசேட அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாநாடு எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதிலேயே இந்த விசேட அறிவிப்பை விடுக்கவுள்ளார் என அறியமுடிகின்றது.

பொது சொத்துக்கள் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கடந்த 26ஆம் திகதி சரீரப்பிணையில் விடுதலைச் செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

# ஜனாதிபதி அனுர யாழுக்கு விஜயம்



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்று, ஒரு வருடம் பூர்த்தியாவதை இட்டு, முன்னெடுக்கப்படவிருக்கும் செயற்றிட்டங்களை ஆரம்பித்து வைக்க யாழ்ப்பாணத்திற்கு இன்று திங்கட்கிழமை (01) அன்று விஜயம் செய்யவுள்ளார்.

காலை 08.30 மணியளவில் மயிலிட்டி மீன்பிடி துறைமுக அபிவிருத்தி பணிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார். தொடர்ந்து , யாழ். மாவட்ட செயலக வளாகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களத்தின் அலுவலகத்தினை திறந்து வைக்கவுள்ளார்.

தொடர்ச்சி P2

# வென்னப்புவ துப்பாக்கிச் சூட்டில் 'கட்டா' பலி; 'மோண்டா' காயம்



வென்னப்புவ வேவ வீதியில், ஞாயிறுக்கிழமை (31) காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும், மற்றொருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் வென்னப்புவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இறந்தவர் வென்னப்புவ, கட்டா என அறியப்படும், உடசிறிகமவைச் சேர்ந்த தனுஷ்க உதயசாந்த என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து மாரவில ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மற்றொரு நபர் மோண்டா என்றழைக்கப்படும் லுனுவில கிரிமதியானாவைச் சேர்ந்த கயான் பெர்னாண்டோ என்பவர் ஆவார்.

தொடர்ச்சி P2

## அசையும், அசையா

# சொத்துக்களை பறிமுதல் செய்ய தீவிர விசாரணை




இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் கைது செய்யப்பட்ட பாதாள உலகக் கும்பல் தலைவர் கெஹெல்பத்தர பத்மே மற்றும் ஐந்து பாதாள உலகக் குற்றவாளிகளுக்குச் சொந்தமான மில்லியன் கணக்கான ரூபாய் மதிப்புள்ள அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்களையும் பறிமுதல் செய்ய சட்டவிரோத சொத்து புலனாய்வுப் பிரிவு விசாரணையைத் தொடங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

# கோட்டாவுக்கு சி.ஐ.டி. அழைப்பு



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வாக்குமூலம் அளிக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி முகத்திடலில் போராட்டம் நடத்தியவர்கள் மீதான தாக்குதலைக் கட்டுப்படுத்தத் தவறியது தொடர்பாக முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் அளித்த வாக்குமூலம் தொடர்பில் கோட்டாபயவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், அவர் அழைக்கப்பட்ட திகதி குறித்த தகவல் இன்னும் வெளியாகவில்லை.

## கொள்ளையிட்ட நகைகளை விற்று

# கள்ளக்காதலிக்கு கண்களை மூடிக்கொண்டு செலவழிப்பு



நாவலப்பிட்டி, அங்காடி வளாகத்தின் இரண்டாவது மாடியில் உள்ள தங்கக் கடை மற்றும் தங்க அடகு கடைக்குள் புகுந்து 3.5 மில்லியன் ரூபாய்க்கு மேல் மதிப்புள்ள தங்க ஆபரணங்கள் மற்றும் உபகரணங்களைத் திருடிய சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கஹடகஸ்திகிலிய பொலிஸ் பிரிவில் பதிவு செய்யப்பட்ட குற்றவாளிகள் பட்டியலில் உள்ளார்.

நாவலப்பிட்டி பகுதியில் உள்ள ஒரு பிரபலமான பூக்கடையில் ஒட்டுநராகப் பணியாற்றிய சந்தேக நபர், போதைப்பொருள் மற்றும் பந்தயத்திற்கு அடிமையானவர் என்று கூறப்படுகிறது.

தொடர்ச்சி P2

# ரூ. 2,000 நாணயத்தாள் புழக்கத்திற்கு வரும்




இலங்கை மத்திய வங்கியின் 75ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் வெளியிடப்பட்ட புதிய நினைவு ரூ. 2,000 நாணயத்தாள் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து மத்திய வங்கியின் ஆளுநர் டாக்டர் நந்தலால் வீரசிங்கவால், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிடம் வெள்ளிக்கிழமை(29) காலை வழங்கப்பட்டது.

நிதியமைச்சர் என்ற முறையில் அனுரகுமார திசாநாயக்கவின் கையொப்பத்துடன் புழக்கத்திற்கு வெளியிடப்பட்ட முதல் நாணயத்தாள் இதுவாகும்.

தொடர்ச்சி P2

## அறுகம்பேயில்

# இஸ்ரேலியர்கள் இருவர் தாக்கியதில் தம்பதிக்கு காயம்

அறுகம்பே விருந்தகமொன்றின் உரிமையாளர் மற்றும் அவரது மனைவியைத் தாக்கியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டில் இஸ்ரேலிய பிரஜைகள் இருவர் பொத்துவில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


தாக்குதலுக்குப் பின்னர் காயமடைந்ததாகக் கூறப்படும் தம்பதியினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

கைதான சந்தேக நபர்கள் இருவரும் 26 வயதுடையவர்கள் என தெரியவந்துள்ளது.

விருந்தகத்தன் உரிமையாளரும் அவரது மனைவியும் தங்கள் வாகனத்தில் பயணித்தபோது இரண்டு இஸ்ரேலியர்களும் வீதியை வழிமறித்துள்ளனர். இதனால், கடுமையான வாக்குவாதம் ஏற்பட்டது.

அதன்பின்னரே, இஸ்ரேலிய பிரஜைகள் இருவரும் அந்த தம்பதியினரை தாக்கியுள்ளனர் என்பது விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

PAGE 1 தொடர்ச்சிகள்



# சுயாதீன விசாரணை வேண்டும்

அவர்களின் குடும்பங்கள் மற்றும் மனித உரிமை பாதுகாவலர்கள் எதிர்கொள்ளும் கண்காணிப்பு, அச்சுறுத்தல்கள், மிரட்டல் மற்றும் பழிவாங்கல்கள் குறித்தும் ஐக்கிய நாடுகள் சபை கவலை கொண்டுள்ளது.

இந்தநிலையில், தங்கள் உரிமைகளைப் பயன்படுத்துவதில் ஈடுபட்டுள்ள அனைவரும் தண்டிக்கப்படக்கூடாது என்றும், பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நாளிலும், ஒவ்வொரு நாளும், தங்கள் அன்புக்குரியவர்களைத் தேடும் ஒவ்வொரு குடும்பத்துடனும் ஐக்கிய நாடுகள் சபை உறுதுணையாக நிற்கின்றது.

பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குடும்பங்கள் உண்மை, நீதி, இழப்பீடுகள் மற்றும் மீண்டும் நிகழாததற்கான உத்தரவாதங்களுக்கான உரிமைகளை உணர முடியும் என்பதை உறுதி செய்வதற்காக, வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்த நம்பகமான, சுயாதீனமான விசாரணைகளை ஆதரிப்பதில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து உறுதியாக இருக்கின்றது என்றும் இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் ஆண்ட்ரே பிராஞ்ச் குறிப்பிட்டுள்ளார்.



# ‘இரத்த நிலவை’ காணலாம்

முழு சந்திர கிரகணம் நிகழும்போது, பூமி சரியாகச் சூரியனுக்கும் முழு நிலவுக்கும் இடையே வரும். இதனால், பூமியின் இருண்ட நிழல் (umbra) நிலவின் மீது முழுமையாகப் படர்ந்துவிடும். சூரிய கிரகணத்தைப் போல நிலவு முற்றிலும் இருண்டு போகாது. மாறாக, பூமியின் வளிமண்டலம் வழியாகச் சூரிய ஒளி வளைந்து செல்வதால், நிலவு சிவந்த நிறத்தில் ஒளிரும். இந்தச் சிவந்த நிறத்திற்குப் பின்னால் ‘ரேலே சிதறல்’ (Rayleigh scattering) என்ற அறிவியல் நிகழ்வு உள்ளது. சூரியன் உதயமாகும்போதும், அஸ்தமிக்கும்போதும் வானம் சிவப்பு மற்றும் ஆரஞ்சு நிறங்களில் தோன்றுவதற்கும் இதுவே காரணம்.

சூரிய ஒளி பூமியின் வளிமண்டலத்திற்குள் நுழையும்போது, காற்று மூலக்கூறுகளால் சிதறடிக்கப்படுகிறது. இதில், நீலம், ஊதா போன்ற குறுகிய அலைநீளங்கள் கொண்ட ஒளி சிதறிவிடும். ஆனால், சிவப்பு, ஆரஞ்சு போன்ற நீண்ட அலைநீளங்கள் கொண்ட ஒளி, வளிமண்டலம் வழியே வளைந்து நிலவைச் சென்றடைகிறது. இதன் காரணமாகவே, கிரகணத்தின்போது நிலவு செம்பு, ஆரஞ்சு அல்லது சிவப்பு நிறத்தில் மின்னுகிறது.

எதிர்வரும் 7ஆம் திகதி நிகழும் சந்திர கிரகணம் மிகவும் முக்கியமானது. ஏனெனில், இதன் முழுமையான நிலை சுமார் 82 நிமிடங்கள் நீடிக்கும். இது சமீப காலத்தில் காணப்பட்ட மிக நீண்ட சந்திர கிரகணங்களில் ஒன்றாகும். இந்த அற்புதமான நிகழ்வை ஆசியா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா கண்டங்களில் காணலாம். மேலும், உலகின் சுமார் 87% மக்கள் இந்த வானியல் அதிசயத்தை நேரடியாகக் காண வாய்ப்புள்ளது.

சராசரியாக 2.5 ஆண்டுகளுக்கு ஒருமுறை மொத்த சந்திர கிரகணங்கள் நிகழ்ந்தாலும், இவ்வளவு நீண்ட கால அளவிலும், பரந்தளவில் தெரியும் கிரகணங்கள் மிகவும் அரிது. எனவே, இது வானியல் ஆர்வலர்களுக்கு சிறந்த வாய்ப்பு.

கண்கவர் ‘இரத்த நிலவை’ காணும் அரிய வாய்ப்பு இலங்கையர்களுக்குக் கிடைக்கும் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறைத் தலைவரும், ஆர்தர் சி. கிளார்க் நவீன தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவருமான பேராசிரியர் சந்தன ஜெயரத்ன தெரிவித்தார்.

# ஜனாதிபதி அனுர யாழுக்கு விஜயம்

மண்டைதீவு பகுதியில் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள சர்வதேச துடுப்பாட்ட மைதானத்தின் பணிகளை மதியம் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

நாளை செவ்வாய்க்கிழமை (02) முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தின் புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளதுடன், தெங்கு முக்கோண வலய பணிகளையும் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

# வென்னப்புவ துப்பாக்கிச் சூட்டில் ‘கட்டா’ பலி; ‘மோணடா’ காயம்

துப்பாக்கிச் சூட்டில் பலியானவர் வென்னப்புவ பொலிஸ் நிலையத்திற்கு கையெழுத்திட ஞாயிற்றுக்கிழமை (31) அன்று வந்து தனது நண்பருடன் திரும்பிக் கொண்டிருந்தவர் என்று கூறப்படுகிறது.

காரில் வந்த ஒரு குழு துப்பாக்கிச் சூட்டை நடத்தியதாகவும், பாதிக்கப்பட்ட இருவரும் பயணித்த மோட்டார் சைக்கிள் சாலைக்கு அருகிலுள்ள கான்கிரீட் காணுக்குள் விழுந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதேநேரத்தில், பலத்த துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபரும் அதே கான்கிரீட் காணுக்குள் விழுந்து அங்கேயே இறந்து விட்டதாக விசாரணை நடத்தி வரும் வென்னப்புவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## அசையும், அசையா

# சொத்துக்களை பறிமுதல் செய்ய தீவிர விசாரணை

அதன்படி, கம்பஹா, மினுவங்கொட, கெஹெல்பத்தர மற்றும் பல பகுதிகளில் உள்ள கெஹெல்பத்தர பத்மேவுக்குச் சொந்தமான கிட்டத்தட்ட 750 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மில்லியன் கணக்கான ரூபாய் மதிப்புள்ள பிற சொத்துக்களை அடையாளம் காண விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன. கெஹெல்பத்தர பத்மே தனது குடும்ப உறுப்பினர்களின் பெயர்களில் பல சொத்துக்களை வாங்கியிருப்பதை அடையாளம் கண்டுள்ள விசாரணை அதிகாரிகள், இது தொடர்பாக விரிவான விசாரணைகளையும் தொடங்கியுள்ளனர்.

அடையாளம் காணப்பட்ட சொத்துக்களில் ஹோட்டல்கள், வீடுகள், நிலங்கள், கட்டிடங்கள், வாகனங்கள் மற்றும் பல சொத்துக்கள் அடங்கும் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இதற்கிடையில், காவலில் உள்ள பாதாள உலகக் குற்றவாளிகளான கமாண்டோ சாலிந்த, பாணந்துறை நிலங்கா, பாக்கோ சமன் மற்றும் தம்பரி லஹிரு ஆகியோருக்குச் சொந்தமான அனைத்து சொத்துக்களையும் கண்டறிய சட்டவிரோத சொத்து புலனாய்வுப் பிரிவு ஏற்கனவே விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் கைது செய்யப்பட்ட இவர்கள், விசேட விமானத்தின் ஊடாக, இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு, இலங்கை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# ரணில் 6ஆம் திகதி விசேட அறிவிப்பு

அவருக்கு எதிராக வழக்கு, செப்டெம்பர் 26ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட வைத்திய அறிக்கைகளை பரிசீலித்த பின்னர், கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர இந்த உத்தரவை பிறப்பித்திருந்தார்.

அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய சம்பவம் தொடர்பாக பொது சொத்துக்கள் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடந்த 22 ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டார்.

அதே நாளில் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அவரது உடல்நிலையைக் கருத்தில் கொண்டு, அவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார், வைத்திய பரிந்துரைகளின் பிரகாரம் முன்னாள் ஜனாதிபதியை கொழும்பு தேசிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க) வைத்தியசாலையில் இருந்து வெள்ளிக்கிழமை (29) அன்று வெளியேறினார்.

# கள்ளக்காதலிக்கு கண்களை மூடிக்கொண்டு செலவழிப்பு

நிகினி போயா தினத்தின் அதிகாலையில், சந்தேக நபர் சம்பந்தப்பட்ட தங்கக் கடைக்குள் நுழைந்து தங்க நகைகள், நவீன மொபைல் போன், மடிக்கணினி கணினி மற்றும் கிட்டத்தட்ட 3.5 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள மின்னணு பொருட்களைத் திருடினார்.

நாவலப்பிட்டியின் ஹோல்கம பகுதியில் உள்ள ஒரு பூக்கடையில் பணிபுரியும் ஒரு நண்பரின் வீட்டிற்குச் சென்றார். பின்னர் அவர் நண்பருடன் கடைக்குத் திரும்பி, அங்கு நிறுவப்பட்ட பாதுகாப்பு

கெமரா அமைப்பிலிருந்து தரவு சேமிப்பு சாதனத்தை அகற்றி, நாவலப்பிட்டியின் பவ்வாகம பகுதியில் உள்ள மகாவலி

ஆற்றில் வீசினார்.

பின்னர், சந்தேக நபர்கள், மல்லந்த பகுதியைச் சேர்ந்த மற்றொரு நண்பருடன் சேர்ந்து, கஹடகஸ் திகிலிய, மிஹிந்தலை, கண்டி, கம்பளை, கினிகத்தேன மற்றும் நாவலப்பிட்டிய ஆகிய இடங்களில் உள்ள அடகுக் கடைகளில் பணத்தைப் பெறுவதற்காகத் திருடப்பட்ட தங்க நகைகளை அடகு வைத்தனர்.

சந்தேக நபர்கள் பெற்ற பணத்தில் இருந்து சுமார் 500,000 ரூபாய் மதிப்புள்ள பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளையும் பிரதான சந்தேக நபர் வாங்கினார்.

மிகுதி இருந்த பணத்தில் ஏனைய இரண்டு சந்தேக நபர்களுக்கும் பணம் கொடுத்துள்ளார், மீதமுள்ள பணத்தை மது அருந்தவும், மசாஜ் மையங்களுக்குச் செல்லவும், தனது கள்ளக்காதலிக்குப் பணம் கொடுக்கவும் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தத் திருட்டு தொடர்பாக பொலிஸாருக்கு புகார்கள் கிடைத்ததைத் தொடர்ந்து, விரிவான விசாரணைக்குப் பிறகு சந்தேக நபர்களை அடையாளம் காண முடிந்தது, மேலும் பிரதான சந்தேக நபரும் இரண்டாவது சந்தேக நபரும் கடந்த மூன்று மாதங்களில் நாவலப்பிட்டி நகரில் உள்ள மத இடங்கள், கடைகள் மற்றும் வீடுகளுக்குள் புகுந்து கொள்ளையடிப்பது உட்பட ஏராளமான கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர் என்பது தெரியவந்துள்ளது.

# “சிறுவர்களை பாதுகாப்போம்”...

பி.கேதீஸ்

திம்புள்ள பத்தனை மவுண்ட்வேர்ணன் பிரதேச மக்களால் “சிறுவர்களை பாதுகாப்போம்” என்ற தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணி ஞாயிற்றுக்கிழமை (30) நடைபெற்றது.

குறித்த பேரணியானது மவுண்ட்வேர்ணன் தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு திம்புள்ள பத்தனை பொலிஸ் நிலையம் வரை வந்து மீண்டும் மவுண்ட்வேர்ணன் தோட்டத்தை வந்தடைந்து நிறைவு பெற்றது. இந்த பேரணியில் ஊர்வலமாகச் சென்ற சிறுவர்கள் மற்றும் பெற்றோர்கள் கோஷங்களை எழுப்பியும் சுலோகங்களை ஏந்தியவாறும் கலந்து கொண்டனர்.








# சமனுக்கு சி.ஐ.டி. அழைப்பு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இங்கிலாந்து பயணம் மற்றும் வருகைக்காக அரசு நிதியைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டு குறித்து வாக்குமூலம் அளிப்பதற்காக சமன் ஏக்கநாயக்கவை, திங்கட்கிழமை (01) அன்று முன்னிலையாகுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் அழைப்பு விடுத்துள்ளது.



# ரூ. 2,000 நாணயத்தாள் புழக்கத்திற்கு வரும்




இது புழக்கத்திற்கான நினைவு நாணயத்தாளில் வெளியிடப்பட்டுள்ளது மற்றும் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட 5ஆவது நினைவு நாணயத்தாளில் இதுவும் ஒன்றாகும்.

தேசிய வளர்ச்சிக்கான அடித்தளமாக பொருளாதார ஸ்திரத்தன்மையை வளர்ப்பதற்கான மத்திய வங்கியின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் வகையில், ‘செழிப்புக்கான ஸ்திரத்தன்மை’ என்ற ஆண்டு விழாவின் கருப்பொருளுக்கு ஏற்ப இந்த நாணயத்தாள் வெளியிடப்பட்டுள்ளது.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தகவல் சேகரிப்பு







எம்.எஸ்.எம்.நூர்தீன்

மட்டக்களப்பு குருக்கள் மடம் மனித புதைகுழியை தோண்டுவதற்கான அனுமதியை களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றம் வழங்கியதையடுத்து 1990ஆம் ஆண்டு டிசெம்பர் 07ஆம் திகதி அன்று கடத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின்

தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கை காத்தான்குடி முகைதீன் மெதத்தைப் பெரிய ஜும்ஆப் பள்ளிவாயல் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (31) அன்று இடம்பெற்றது

குரல்கள் அமைப்பு, காத்தான்குடி பள்ளி வாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம், காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபை மற்றும் முறைப்பாட்டாளர் அப்துல் மஜீத் அப்துர் ரஊப் ஆகியோரின் ஏற்பாட்டில் இந்த தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கை இடம் பெற்றது.

இதன் போது 12.07.1990 அன்று கல்முனையில் இருந்து காத்தான்குடிக்கு சென்று புனித ஹஜ் கடமையை முடித்துக் கொண்டு வீடு திரும்பியோர் மற்றும் காத்தான்குடி ஏனைய கிராமங்களைச் சேர்ந்த. பொது மக்களின் உறவினர்கள் தனது உறவினர்கள் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட ஆவணங்களுடன் வந்து தகவல்களை வழங்கினர்.

இந்த சம்பவத்தில் கடத்தி காணாமலாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு குருக்கள் மடத்தில் புதைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களின் மனித புதை குழியை தோண்டி இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்ய வேண்டும் என தெரிவித்து காத்தான்குடியை சேர்ந்த அப்துல் மஜீத் அப்துர் ரஊப் என்பவரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிரகாரம் கடந்த 25ஆம் திகதி களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்ற நீதிபதி குருக்கள் மடம் மனித புதைகுழியை தோண்டுவதற்கு கட்டளை பிறப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.







# கோமாரியில் கோர விபத்து; ஒருவர் பலி; 52 பேர் காயம்

பாறுக் ஷிஹான்

பெருந்தொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்ததுடன் 52 பேர் காயமடைந்துள்ளனர்.

அம்பாறை அக்கரைப்பற்று - பொத்துவில் வீதி கோமாரி பகுதியில் சனிக்கிழமை (30) மாலை கெப்பட்டிபொல பகுதியிலிருந்து சுற்றுலா சென்ற பேருந்தொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது. மேலும் விபத்தில் உயிரிழந்தவர் வெலிமடை பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய நபர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்தில் சிக்கியவர்கள் வெலிமடையில் இருந்து பயணத்தை மேற்கொண்டு அம்பாறை தீகவாபி ராஜமாக விகாரைக்கு வருகை தந்து சமய வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் அங்கிருந்து பொத்துவில் அறுகம்பே பிரதேசத்திற்கு செல்லும் வழியில் விபத்து இடம்பெற்றுள்ளது. சாரதியின் தூக்கக் கலக்கமே விபத்துக்கு காரணம் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த விபத்தில் காயமடைந்தவர்கள் பொத்துவில் மற்றும் திருக்கோவில் வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.




# யானை தாக்குதலில் குடும்பஸ்தர் உயிரிழப்பு



அ.அச்சுதன்

திருகோணமலை மாவட்டம், சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கநகர் பகுதியில் யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி இரண்டு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் சனிக்கிழமை (30 அன்று இடம்பெற்றுள்ளது.

தங்கநகர் பகுதியைச் சேர்ந்த இராசேந்திரன் லிங்கரதன் (வயது 58) என்பவரே யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

இரவு வயலுக்கு யானை காவலுக்குச் சென்று காலை வீடு திரும்புகையில் தோட்டம் ஒன்றிக்குள் மறைந்திருந்த யானை தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில் தொடர்ச்சியாக யானையின் தாக்குதலினால் பலர் உயிரிழந்து வருவதாகவும் காட்டு யானைகள் ஊருக்குள் உள்நுழைவதைக் கட்டுப்படுத்த முறையான திட்டங்கள் எவையும் நடைமுறைப்படுத்த ப்படவில்லை எனவும் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

# இந்தோனேசிய அதிகாரிகளுக்கு பாராட்டு

டி.கே.பி.கபில

இந்தோனேசியாவின் ஜகார்த்தாவில் இலங்கை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளைக் கைது செய்வதற்கு உதவிய இந்தோனேசிய பொலிஸ் சிறப்புப் படை அதிகாரிகள், அவர்களை சனிக்கிழமை(30) அன்று இரவு அழைத்து வந்த அதே விமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

பொலிஸ் சிறப்புப் படை அதிகாரிகளுக்கு விமான நிலையத்தில் வைத்து மாலை அணிவித்து வரவேற்கப்பட்டு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.




பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, பொலிஸ்மா அதிபர்ல் பிரியந்த வீரசூரிய, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உட்லர், பொலிஸ் சிறப்புப் படை அதிகாரிகள் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறையின் உயர் அதிகாரிகள் குழுவும் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள சிறப்பு விருந்தினர்கள் ஓய்வறையில் இந்தப் பாராட்டு வியாழ நடத்தப்பட்டது.

# நிரந்தர வீடுகள் திறந்து வைப்பு

ஏ.எச்.ஹஸ்பர்

திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஐந்து வீடுகள் பயனாளிகளுக்கு கையளிக்கும் நிகழ்வு மக்கள் சேவை மன்றத்தின் தலைவர் எம்.ரீ.எம். பாரிஸ் தலைமையில் சனிக்கிழமை(30) அன்று இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மேற்படி நிகழ்வில், யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து தற்கால அசாதாரண பொருளாதார சூழலில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற, நிரந்தர வீடுகளின்றி கஷ்டப்படுகின்ற ஐந்து குடும்பங்களுக்கு மேற்படி வீடுகள் கையளிக்கப்பட்டது.




சிலி நாட்டை தலைமையகமாக கொண்டு இயங்கும் சர்வதேச தொண்டு ஸ்தாபனமான SELAVIP Foundation நிறுவனத்தின் நிதி பங்களிப்புடன் மக்கள் சேவை மன்றம் 40 நிரந்தர வீடுகள் இந்த ஆண்டு நிர்மாணித்தது.

இவை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வுகள் பல கட்டங்களாக நடைபெற்று வருகிறது. அந்த அடிப்படையில் இந்நிகழ்வு ஆறாவது கட்டமாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், எம்.நௌபர் (திருமலை பிரதேச சபை உறுப்பினர்), என்.எம். ஹிதாயத்துல்லாஹ் (அதிபர்). கே.எம்.றியாஸ் (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்), மக்கள் சேவை மன்ற சிரேஷ்ட உத்தியோகத்தர்களான, பிரகலநாதன், எம்.யூ.குவைசர், பீ.கிருஷ்ணவேணி, எம்.சாஸ்த், உலமாக்கள் மற்றும் சமூக மட்ட நிறுவன உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டதுடன், இந்த வீட்டு திட்ட உதவி புரிந்த மக்கள் சேவை மன்றத்திற்கு பயனாளிகளும், கலந்து கொண்ட அதீதிகளும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொண்டனர்.

# 125ஆவது ஆண்டு நிறைவு இரத்ததான முகாம்



எஸ்.ஆர்.லெம்பெட்

மன்/நானாட்டான் டிலாசால் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவையொட்டி இடம்பெறும், சிறப்பு நிகழ்வுகளின் ஒன்றான இரத்த தான முகாம் நானாட்டான் டி லா சால் கல்லூரி பாடசாலை வளாகத்தில் பாடசாலை முதல்வர் அருட்சகோதரர் ஏ.மனோ ரஞ்சிதன் தலைமையில் சனிக்கிழமை(30) காலை இடம்பெற்றது.

குறித்த இரத்ததான முகாமை டி லா சால் கல்லூரி சமூகம், இணைந்து பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் ஆகியோர்



இணைந்து சிறப்பு ரத்த தான முகாமை முன்னெடுத்தனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கியின் உதவியுடன் முன்னெடுக்கப்பட்ட குறித்த இரத்ததான முகாமில் பலர் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர்.

# எல்லயில் திடீர் தீ பரவல்

எல்ல, தெமோதர ஒன்பது வளைவு பாலத்திற்கு அருகிலுள்ள மலையில் ஞாயிற்றுக்கிழமை (31) அன்று திடீர் தீ பரவல் ஏற்பட்டதாக பதுளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பொலிஸார் தீயைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நிலவும் வறண்ட வானிலையுடன் தீ வேகமாக பரவி வருவதாகவும், தீ பரவலுக்கான காரணம் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பதுளை அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.



# பல ஆண்டுகளாக துயரத்தில் உழலும் உறவினர்கள்

அரசியல், வன்முறை, போர் போன்ற பிற காரணிகளால் உலகம் முழுவதும் காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய தகவலுக்காகக் காத்துக்கிடக்கும் அவர்களுடைய உறவினர்களின் துயரம் குறித்து கவனத்தை ஈர்ப்பதற்காக ஆகஸ்ட் 30ஆம் திதியை சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினமாக ஐ.நா. கடந்த 2011.08.30ஆம் திகதியன்று அறிவித்தது.

இந்தநாளில் போராட்டம் நடத்தியும், பேரணியாகச் சென்று முழக்கங்கள் எழுப்பியும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், இந்நாளைக் கடைப்பிடித்துவருகின்றனர்.

இலங்கையில் 1980ஆம் ஆண்டிலிருந்தே ஏராளமான தமிழர்கள் வலுக்கட்டாயமாகக் காணாமல் ஆக்கப்பட்டிருந்தாலும், 1983 முதல் 2009ஆம் ஆண்டு வரை நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது ஏராளமான மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இதற்கு அரசே காரணம் என காணாமல் போனவர்களின் உறவினர்கள் கூறிவருகின்றனர்.

வெளியில் சென்ற நம் குடும்பத்தினர், சரியான நேரத்தில் வீடு திரும்பாவிட்டால் நம் மனம் எவ்வளவு பதறிப்போகும். என்பதை அனுபவித்தவர்களால் மட்டுமே சரியாக, உணர்வுபூர்வாக சொல்லமுடியும். நமது நாட்டில், தமிழர்கள் மட்டுமே அந்த வலியை இன்னும் அனுபவித்து கொண்டிருக்கின்றனர்.

எனினும், நவீன தொழில்நுட்ப வசதிகள் பெருகிவிட்ட காலத்தில், அவற்றின் மூலம் தொடர்புகொள்ள முயல்வார். தொடர்புகொள்ள முடியவில்லையென்றால், அவர்கள் வீட்டுக்கு வந்து சேரும்வரை அதைப் பற்றியே நம் மனம் யோசித்துக்கொண்டிருக்கும்.

சரி... அந்தக் காத்திருப்பு நேரம், நிமிடங்களாக, மணிகளாக, பல மணி நேரங்களாக இருந்தால் பரவாயில்லை. பல ஆண்டுகளென்றால் அப்படிக் காணாமல் போனவர்களின் குடும்பத்தினர், நண்பர்கள் என அவருக்குப் பிரியமானவர்கள் எவ்வளவு துயரத்தில் உழல்வார்கள்.

தங்களுடைய உறவினர்களைத் தேடித்தேடியே பலரும் இறந்து விட்டனர். இன்னும் சிலர் வயதானவர்களாகி விட்டனர். நோய்வாய்ப்பட்டவர்கள், போராட்ட களத்துக்குச் செல்லமுடியாது. வீடுகளுக்குள்ளே முடங்கி இருக்கின்றனர். எனினும், தங்களுடை உறவினர்கள் வருவார்கள் என்ற நம்பிக்கையை மட்டும் கைவிடவே இல்லை.

அப்படிக் காணாமல் போனவர்களும், மற்றவர்களால் பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டிருந்தால் அவர்களின் குடும்பத்தினர் எவ்வளவு மனவேதனைக்கு ஆளாவார்கள். அப்படி பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு அல்லது பாதுகாப்பு பிரிவினரிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக நீதியைக் கோருகின்றனர்.

தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைத் தீவிரமாக எதிர்த்த ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விலகி இராணுவத்தில் சரணடைந்த பலரும் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். இவர்கள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா என்பது பற்றிய தகவல்கள் ஏதும் தெரியாமலேயே இருக்கின்றன.

அவர்களின் துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். காணாமல் போனவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டும். காணாமலாக்கப்பட்டிருந்தால் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும்.

ஆட்சிப்பீடமேறிய கடந்த அரசாங்கங்கள் சாக்குப்போக்கு சொல்ல, காலத்தைக் கடத்தி வந்துவிட்டது. ஆகையால், தங்களுடைய உறவினர்களுக்கு என்ன? நடந்தது என்பதை இந்த அரசாங்கம் வெளிச்சத்துக்குக் கொண்டுவரவேண்டும். இவற்றை மட்டுமே இந்த அரசாங்கத்திடமிருந்தாவது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

இந்த ஜகம் (உலகம்) யுகம் பல கடந்தாலும் கூட இன்னமும் இங்கு வாழ்ந்த மாந்தர்களின் ஆணவம் செருக்கு இன்னமும் அழிந்ததாகத் தெரியவில்லை.

ஆணவம் அழியாது. ஆனால், ஒடுங்கும் என்றே சொல்லப்படுகின்றது. சாதாரண மனிதர்களில் இருந்து மாபெரும் அறிஞர்கள், மன்னர்கள், தனவந்தர்கள் என எல்லோருமே உண்மையான பிறப்பின் பெருமையை அறியாது. ஆணவ முனைப்புடன் வாழ்ந்ததால், தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டார்கள்.

இது யார் தப்பு? இயற்கையின் விதி அழுத்தத்திற்கு எதிர்வினையாக அதே அழுத்தம் உண்டு. இந்த சுழற்சி நிற்பதும் இல்லை. அன்பைக் கொடுத்தால் மாபெரும் அன்பு தேடிவரும்.

கலவரம், அராஜகம், எளிய மக்கள் மீது வீரம் காட்டுதல், மக்களிடையே பிரிவுகளை வளர்த்துப் பிரிய வைத்தல், எல்லாமே ஆணவத்தின் மறுவடிவம். கெட்டதை மட்டும் செய்வேன் என துஷ்டர்கள் செய்தால் அது அவர்கள் நெஞ்சத்தினுள் புதைத்த கறல் அல்லவா? அறம் இவர்களை அறுத்தெறியும்.

பருத்தியூர் பால.வயிரவநாதன்

# காலத்தே அரசியல் செய்தல்

லக்ஸ்மன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் செப்ரம்பர் மாத அமர்வு கடந்த பல அரசாங்கங்களினதும் ஜனாதிபதிகளதும் நகர்வுகளுக்கு பின்னர் இம்முறை சற்று எதிர் பார்ப்புடையதாகவேஇருக்கிறது. அதானது, தற்போது இலங்கையில் உருவாகியிருக்கின்ற இடது சாரி மரபில் வந்த மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினை அணுகும் வகையில் முற்று முழுதான மாற்றமுடையதாகவே இருக்கும் என்றே அனைவரும் நம்புகின்றனர்.

நாட்டில் ஊழலை ஒழித்து நீதியை நிலைநாட்டுவோம் என்று உறுதிமொழி கூறி மக்கள் ஆதரவு பெற்று ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசு கடந்தகால அரசுகள் போலவே உள்ளகப் பொறிமுறை மூலமே நடவடிக்கை தொடரும் என்று ஏற்கெனவே அறிவித்திருந்தாலும் இம்முறை கொண்டுவரப்படும் தீர்மானம் மூலமாக அதில் மாற்றம் ஏற்படுத்தப் படக்கூடும் என்றும் நம்பிக்கை காணப்படுகிறது.

இலங்கையைக் கூண்டிலேற்றி பார்த்து விடவேண்டும் என்று துடிக்கும் ஈழத் தமிழர்கள் தமது தொடர்ச்சியான செயற்பாடுகளை நாட்டிலும் புலத்திலும் மேற்கொண்டு வருகின்றனர். அதிலொன்றுதான், தமிழினப் படுகொலைக்குச் சர்வதேச நீதி கோரி தாயகச் செயலணி அமைப்பின் ஏற்பாட்டில், ‘நீதியின் ஓலம்’ எனும் தொனிப்பொருளில் கையெழுத்துப் போராட்டம் கடந்த 23ஆம் திகதி ஆரம்பமாகி 28ஆம் திகதி செம்மணியில் நிறைவு பெற்ற போராட்டமாகும். ஐந்து நாள் கையெழுத்துப் போராட்டமாக வடக்கு கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெற்று முடிந்திருக்கிறது.

அதே நேரத்தில், சர்வதேச வலிந்து காணாமல் ஆகப்பட்டவர்கள் தினத்தில் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் சங்கத்தின் ஏற்பாட்டில் போராட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. இப்போராட்டமானது. உள்நாட்டு பொறிமுறையை நிராகரிக்கிறோம், தமிழின அழிப்புக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்படுதலுக்கும், போர்க்குற்றங்கள் மற்றும் மனிதப் புதைகுழிகள் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணையைக் கோரி நிற்கிறோம் என நடத்தப்பட்டிருக்கிறது.

அத்துடன், சிவில் தரப்புகள், அரசியல் தரப்புகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குக் கடிதங்களை அனுப்பி வருகின்றனர். அக் கடிதங்களும் இலங்கையில் இன அழிப்பு நடவடிக்கைகள், வலிந்து காணமலாக்கப்பட்ட சம்பவங்கள், யுத்த நெறிமுறைகளுக்கு முரணாக நடைபெற்ற போர்க் குற்றங்கள் பற்றி சர்வதேச சமூகத்தின் முழுமையான பங்குபற்றுதலுடன் இன்றுள்ள அரசானது தகுந்த விசாரணைகளை நடத்திப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உரியத் தீர்வுகளை வழங்க முன்வரவேண்டும் என்று கோருவதாகவே அமைந்திருக்கின்றன. வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களை தேடியும், அவர்களுக்கான நீதி கோரியதுமான போராட்டம் 3,000 நாட்களைக் கடந்து இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்த தொடர் முயற்சிக்குத் தீர்வு கிடைக்கவேண்டும் என்று எல்லோருமே சிந்திக்க வேண்டும்.

இந்தநிலையில்தான், இலங்கைத் தமிழரசுக் கட்சி தன்னுடைய கடிதத்தை மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்பியிருக்கிறது. இதில் என்ன விசேசமென்றால், தமிழர்களின் இன அழிப்பை முன்னிறுத்தி அக் கடிதத்தை எழுதியிருப்பதுதான். அதற்கான காரணம் என்னவென்று பலரும் பலவகைகளிலும் தற்போது எழுதி வருகின்றனர். எது எவ்வாறானாலும், வடக்கு கிழக்கின் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான அரசியல் கட்சி என்ற வகையில் தமிழரசுக் கட்சி தம் கடமையை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தைச் சமாளித்திருக்கிறது.

ஏனைய கட்சிகள், சிவில் சமூகத்தினர் இலங்கைத் தமிழரசுக்கட்சியை இணைத்து ஒருமித்த கடிதத்தை அனுப்பிவைக்க முயன்றபோதும் ஏற்றுக்கொள்ளாத நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் எல்லோரும் பொதுமைப்படுத்திய விடயத்தை முன்னிறுத்தி கடிதத்தை வரைந்திருக்கின்றனர்.

இன அழிப்புக்கான அரச பொறுப்பு குறித்து சர்வதேச நீதிமன்றில் விசாரிக்கப்பட வேண்டும் என்ற விடயத்தை முதலாவதாக முன்வைத்துள்ள தமிழரசுக் கட்சி செம்மணியை மையப்படுத்தியதாக அதற்கான ஆதாரங்களை ஒஸ்லாப் பொறிமுறையின் அடிப்படையில் திரட்ட வேண்டும் என வலியுறுத்தியிருக்கிறது. ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினையானது ஆங்கிலேயர்களின் காலனித்துவ நடவடிக்கை காரணமாக உருவானது. அதற்கான முழுப் பொறுப்பினையும் பிரித்தானியா ஏற்றுக் கொண்டாகவேண்டும் என்ற கோசம் இருக்கின்ற நிலையில், தமிழர்களின் இறைமை குறித்து 1976ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி மேற்கொண்ட நடவடிக்கை சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் வட்டுக்கோட்டைத் தீர்மானம் குறிப்பிடப்படவில்லை.

ஆயர்கள் - சைவ மதத் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொது நிலையினர் ஆகியோர் இணைந்து அனுப்பிய கடிதம், 2002ஆம் ஆண்டுக்கு முற்பட்ட குற்றங்களும் விசாரிக்கப்பட வேண்டும் எனக் கூறியிருக்கிறது. தமிழ்த் தேசியப் பேரவை இன அழிப்பு விசாரணையை சர்வதேசமே நடத்தவேண்டும் என்று கோரியிருந்தது. ஆனால், அக் கடிதத்துக்கு அதற்கு ஆணையாளர் உள்ளக விசாரணைக்கு முக்கியத்துவம் கொடுத்திருந்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின், 2015ஆம் ஆண்டு தீர்மானத்தின் மூலம் கொண்டு வரப்பட்ட காணாமல் போனோர் அலுவலகத்தை, வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் பெற்றோர்கள், உறவினர்கள் நிராகரித்துள்ளனர். இழப்பீட்டுக்கான அலுவலகத்தினை மறுக்கின்றனர். இருந்தாலும், ஆணையாளர் அனுப்பிய பதில் கடிதத்தில் காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகம் முக்கியப்படுத்தப்பட்டிருந்தது. வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் சர்வதேச விசாரணையைக் கோரிநிற்கின்ற நிலையில் ஆணையாளர் இல் அலுவலகத்தை முதன்மைப்படுத்துவது எதிர்பார்க்கப்படுகின்ற விடயத்துக்கு மாறானதே.

குட்சிகள், அமைப்புகளின் கடிதங்கள் குறித்து ஒற்றுமை இன்மை போன்ற சில விமர்சனங்களை முன்வைக்கலாம் என்றாலும், தமிழர் தரப்பின் கடந்த காலங்களில் இல்லாத ஒழுங்குபடுத்தல் இம்முறை அனைவருடைய கடிதங்களிலும் காணப்படுவது பாராட்டத்தக்கதாகவே இருக்கிறது.

பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிக்கச் சர்வதேச நாணய நிதியத்திடம் கடந்த ரணில் விக்ரமசிங்கள அரசு சென்றதை விமர்சித்த அரசாங்கத்தின் செயற்பாடுகளைத் தொடர்ந்து எதிர்த்தே வந்திருந்த அனுரகுமார திசாநாயக்க தரப்பு ஆட்சிக்கு வந்ததும் சர்வதேச நாணய நிதிய விடயத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஏனைய விடயங்களை அப்படியே வைத்துக் கொண்டு நகர்த்துகின்றது. தமிழர்கள் விடயத்திலும் அதனையே செய்கிறது. அதாவது கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட உள்ளகப் பொறிமுறை விடயத்தையே முன்னுரிமைப்படுத்தினர்.

வடக்கு கிழக்கில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த இன அழிப்புக்கான அரச பொறுப்புக் கூறலுக்கான நீதியைக் கோருகின்ற தமிழர் தரப்பு விக்கிரமாதித்தன் போன்று தொடர்ந்தும் முயற்சிக்கவேண்டிய கட்டாயத்திலேயே இருக்கின்றது. .சர்வதேச சமூகம் விசாரணை நடத்துவதற்கான அனுமதியை மறுப்பதும் தமிழ் மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களை அரசு கணக்கெடுக்காதிருப்பதும் கவலையானதாக இருந்தாலும் இம்முறை கொண்டுவரப்படுகின்ற தீர்மானமானது வலுவானதாக இருக்குமானால் தமிழர்கள் சற்றேனும் நிம்மதியடையக்கூடும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறிவதற்காக அரசினால் அமைக்கப்பட்ட அலுவலகங்கள், ஆணைக் குழுக்களில் நம்பிக்கை இழந்த மக்கள் வீதிக்கு இறங்கி சர்வதேசத்திடம் நியாயம் கோருகின்றனர். படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கோரி வடக்கு கிழக்கு ஊடக அமைப்புகள் போராட்டங்களை நடத்துகின்றன. தொடர்ச்சியாக பல்வேறு கோரிக்கைகளுடன் கடிதங்கள் அனுப்பப்படுகின்றன.

இவ்வாறான நிலையில்தான், முள்ளிவாய்க்காலில் நடைபெற்றவை இனப்படுகொலை அல்ல என்று முழு பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயல்கிற அரசும் சர்வதேசமும் தமிழர் தரப்பின் கோரிக்கைகளுக்குச் சாதகமான பதிலைக் கொடுக்குமா என்கிற சந்தேகம் உருவாகின்றது.

அந்தவகையில், இலங்கையில் இனப்படுகொலைகள் நடந்தன என்பதை செம்மணியிலும், மன்னாரிலும் எனப் இன்ன பல இடங்களிலும் கண்டெடுக்கப்படும் மனித எச்சங்கள் ஆதாரங்களாக உறுதிப்படுத்தினாலும் சர்வதேசப் பொறிமுறையின்றி முழுமையான தீர்வு கிடைக்கப்போவதில்லை. எனவே நடந்து முடிந்த இன அழிப்பு நடவடிக்கைகள், வலிந்து காணமலாக்கப்பட்ட சம்பவங்கள், யுத்த நெறிமுறைகளுக்கு முரணாக நடைபெற்ற போர்க் குற்றங்கள் பற்றி சர்வதேச சமூகத்தின் முழுமையான பங்குபற்றுதலுடன் விசாரணை நடைபெற்றாகவேண்டும் என்கிற முடிவு கிடைக்கின்றது.

அதற்காக தமிழர் தரப்பின் ஒற்றுமை முதன்மைப்படுத்தப்படுகின்றதாக இருத்தல் வேண்டும். இம்முறை ஜெனிவா அமர்வை இலக்கு வைத்து கோரிக்கை கடிதங்களை அனுப்புவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட வேளை ஒன்றிணைவுக்கு இ்சாயது தனிக்காட்டு ராஜாவாக தமிழரசுக்கட்சி நின்றிருந்தது. அதனைச் சிலர் தமிழர்கள் அனைவரும் கோருகின்ற இன அழிப்புக்கான நீதிக் கோரிக்கை விடயத்துக்குள் அக்கட்சி நுழையாது என்றே எண்ணியிருந்தனர். ஆனால். இறுதியில் அதனை முன்னிறுத்தியே தன்னுடைய கடிதத்தை அனுப்பியிருக்கிறது.

இதனை ஒரு முதற்படியாகக் கொள்ளமுடியுமாக இருந்தால், கட்சி அரசியலுக்கு அப்பால் செய்று தமிழ் மக்களின் உரிமை சார் விடயத்திலேனும் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்கப்பால் ஒருமித்துச் செய்யப்படுவதே காலத்தின் தேவையாக இருக்கும். அந்தவகையில் காலத்தே அரசியல் செய்தலை இலங்கைத் தமிழரசுக்கட்சி புரிந்து, தெளிந்து நடந்து கொள்ளுதலே நல்லது.

## கடிதங்கள்

### காட்டு யானைகளால் பெருந்தொல்லை

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மற்றும் அதனை அண்டிய பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(17) அதிகாலை காட்டு யானைகள் சில உட்புகுந்து பல்வேறு சேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

அதிகாலை 4 மணியளவில் பாடசாலையினுள் உட்புகுந்த இக்காட்டு யானைகள், பாடசாலையின் சுற்று மதிலின் சில பகுதிகளையும், பயன்தரும் மரங்களை உடைத்து சேதமாக்கியுள்ளதுடன், பாடசாலையினை அண்டிய பகுதிகளில் இருந்த சில மக்கள் குடியிருப்பு உடைமைகளுக்கும் சேதத்தினை ஏற்படுத்தியுள்ளன.

இதேவேளை, பாடசாலையினை அண்டிய மக்கள் குடியிருப்புக்களுக்குள் புகுந்த இக்காட்டு யானைகள், வீடுகள், சுற்றுமதில்கள், கால்நடை பராமரிப்புக் கொட்டில்கள், கால்நடை உணவுப் பொருட்கள், பயன்தரும் மரங்கள் மற்றும் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைகள் போன்றவற்றுக்கும் பலத்த சேதத்தினை ஏற்படுத்தியுள்ளதாகப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.










# வடக்கு, கிழக்கில் பேரணி

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினமான, ஆகஸ்ட் 30ஆம் திகதி அன்று, வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணி, வடக்கு, கிழக்கில் இடம்பெற்றது.

(வடக்கு, கிழக்கு நிருபர்கள்)















































இலங்கை SOS சிறுவர் கிராமங்களின்

# குழந்தைகள் பாதுகாப்பு வீடியோவுக்கு கௌரவம்

இலங்கை SOS சிறுவர் கிராமங்களுக்கு, 30ஆவது சுமதி விருதுகள் வழங்கும் நிகழ்வில் சிறந்த டிஜிட்டல் விளம்பரத்துக்கான இரண்டாமிட விருது வழங்கப்பட்டிருந்தது. *"Children aren't meant to protect themselves alone. Speak up and trusted adults will keep you safe"* எனும் தொனிப்பொருளில் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் பாதுகாப்பு விழிப்புணர்வு வீடியோவுக்காக இந்த கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. பாதுகாப்பான சூழலாக புலப்பட்ட போதிலும், சிறுவர்கள் எதிர்கொள்ளக்கூடிய மறைந்திருக்கும் ஆபத்துகள் பற்றி அவர்களுக்கு செவிமடுத்து, நம்பிக்கை கொண்டு மற்றும் புரிந்து கொண்டு செயலாற்ற பெரியவர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த வீடியோ அமைந்துள்ளது.



ஒவ்வொரு குழந்தையும் பாதுகாப்பான மற்றும் ஆதரவான சூழலில் வளர்வதை உறுதி செய்வதன் முக்கியத்துவத்தைத் தெரிவிக்கும் அமைப்பின் தொடர்ச்சியான முயற்சிகளை இந்த விருது உறுதிப்படுத்துகிறது. இந்த காணொளி SOS சிறுவர் கிராமங்களின் பராமரிப்பில் உள்ள குழந்தைகளுக்காக மட்டுமல்லாமல், அனைத்து இலங்கை குழந்தைகளுக்காகவும் உருவாக்கப்பட்டது. இது நாடு முழுவதும் உள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் உரிமைகள், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

மேலும், இந்த விருது, குழந்தைகள் பாதுகாப்பைச் சுற்றியுள்ள முக்கியமான பிரச்சினைகளை முன்னிலைப்படுத்த, ஆக்கப்பூர்வமான கதைசொல்லல் மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் காட்சித் தொடர்புக்கான அமைப்பின் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது.

இலங்கை SOS சிறுவர் கிராமங்களின் தேசிய பணிப்பாளர் திவாகர் ரட்னதுரை இந்த வெற்றி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "இந்த கௌரவிப்பு ஒரு சாதாரண விருது என்பதற்கு அப்பாற்பட்டது. சிறுவர்களுக்கு கிடைத்த வெற்றியாகும். குரலற்றவர்களுக்கு கிடைத்த வெற்றியாகும். சிறுவர் நலன்புரி அமைப்பு எனும் வகையில், ஒவ்வொரு பிள்ளையும் பாதுகாப்பாக, கண்ணியத்துடன் மற்றும் அரவணைப்புடன் வளர்வதை உறுதி செய்யக் குரலெழுப்புவது எமது இலக்காகும். குழந்தைகள் மற்றும் இளைஞர்களைப் பாதுகாப்பதற்கான எங்கள் இலக்கை அடைவதில் கதைசொல்லல் எவ்வளவு பயனுள்ளதாக இருக்கிறது என்பதை நாங்கள் அங்கீகரிக்கிறோம். எனவே, இந்த சாதனையை எங்கள் குழந்தைகளுக்கு அர்ப்பணிக்கிறோம், ஏனெனில் அவர்களின் பாதுகாப்பு, அவர்களின் குரல்கள் மற்றும் அவர்களின் எதிர்காலம் ஆகியவை நாங்கள் செய்யும் அனைத்தையும் இயக்குகின்றன." என்றார்.

இந்த விருதினூடாக, SOS குழந்தைகள் கிராமங்கள் குழு, அதன் படைப்பாற்றல் கூட்டாளிகள் மற்றும் நன்கொடையாளர்கள் மற்றும் கூட்டாளிகள் முதல் தன்னார்வலர்கள் மற்றும் சமூக ஆதரவாளர்கள் வரை அதன் பணிகளை ஆதரிக்கும் அனைவரின் முன்முயற்சியையும் பிரதிபலிக்கிறது. அவர்களின் கூட்டு முயற்சிகள், எந்தக் குழந்தையும் விடப்படாத, ஒவ்வொரு இளைஞரும் அக்கறையுடனும் வாய்ப்புகளுடனும் வளர அதிகாரம் அளிக்கப்பட்ட எதிர்காலத்திற்காக உறுதிபூண்டுள்ள ஒரு சக்திவாய்ந்த கூட்டணியின் மையமாக அமைகின்றன.

இலங்கையின் பழமையான தொலைக்காட்சி விருதுகள் வழங்கும் வைபவமாக சுமதி விருதுகள் திகழ்கிறது. சின்னத்திரை கலையம்சங்களின் சிறப்பை கௌரவிப்பதாக அமைந்துள்ளது. ஸ்தாபிக்கப்பட்டது முதல், இலங்கையின் ஊடகங்களின் பிராந்திய குரல்கள் மற்றும் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவது, தொலைக்காட்சி கலையம்சங்களை பரந்தளவில் வியாபிக்கச் செய்யும் வகையில் இந்த கட்டமைப்பு வளர்ச்சியடைந்துள்ளது.

HMD இனால் இலங்கையில்

# 'HMD Fusion 8/256 5G' அறிமுகம்

Human Mobile Devices (HMD), இலங்கையில் HMD Fusion 8/256 5G ஐ அறிமுகப்படுத்தியுள்ளது. இது செயல்திறன், ஸ்டைல் மற்றும் மதிப்பு என அனைத்து அம்சங்களையும் வழங்கும் புதிய ஸ்மார்ட்போன் வகையாகும். தனித்துவமான சாதனமாக அமைந்துள்ள HMD Fusion, அதிநவீன 5G திறன்களுடன் முழுமையான அம்சங்களைக் கொண்டுள்ளது. 5G வலையமைப்பு நாடு முழுவதிலும் விரிவாக்கமடையும் நிலையில், பாவனையாளர்களுக்கு விரைவான இணைப்பை வழங்கும் வகையில் அமைந்துள்ளது. அதன் கண்கவர் அம்சங்களுக்கு அப்பால், HMD Fusion ஒவ்வொரு தருணத்தையும் ஈர்க்கக்கூடிய தெளிவான படம்பிடிக்க வடிவமைக்கப்பட்ட கமரா அமைப்பைக் கொண்டுள்ளது. அதன் 108MP dual பிரதான கமரா சவாலான சூழ்நிலைகளிலும் துடிப்பான, விரிவான படங்களை உறுதி செய்கிறது. அதே நேரத்தில் 50MP selfie கமரா பாவனையாளர்கள் சைகை கட்டுப்பாடுகள் மற்றும் மெதுவான இயக்க திறன்கள் போன்ற மேம்பட்ட அம்சங்களுடன் சரியான சுய-உருவப்படங்களைப் பிடிக்க வலுவூட்டுகிறது. HMD Fusion உடனான ஒவ்வொரு தொடர்பும் காட்சித்தோற்ற விருந்தை வழங்குகிறது. இதில் அதன் துடிப்பான 6.56-அங்குல HD+ HID டிஸ்ப்ளே முக்கிய பங்கைக் கொண்டுள்ளது. மிருதுவான 90Hz refresh rate உடன், நம்பமுடியாத அளவிற்கு அதிவேக காட்சி அனுபவத்தை வழங்குகிறது. உயர்-ஒக்டேன் கேமிங்கிலிருந்து உங்களுக்குப் பிடித்த உள்ளடக்கத்தை ஸ்ட்ரீமிங் செய்வது வரை அனைத்தையும் திரவமாகவும் வசீகரிக்கும் வகையிலும் ஆக்குகிறது.




இந்த சாதனத்தின் 8GB RAM, 16GB வரை விரிவாக்கக்கூடியது. 8GB virtual memory நீட்டிப்பு, 256GB storage, Qualcomm, SM4450, Snapdragon, 4 Gen 2 மற்றும் Octa-core செயலி ஆகியவற்றுடன், பாவனையாளர்கள் ஈர்க்கக்கூடிய பல்பணி திறன்களை அனுபவிக்கிறார்கள். தாமதமில்லாத செயல்திறன், நீட்டிக்கப்பட்ட கேமிங் அமர்வுகள் மற்றும் அவர்களின் முழு கேமிங் நூலகத்திற்கும் storage ஐ அனுபவிக்கிறார்கள். இந்த பல்துறை சாதனத்தை இயக்குவது ஒரு வலுவான 5000mAh பற்றரி ஆகும். இது நீட்டிக்கப்பட்ட பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் 800 க்கும் மேற்பட்ட சார்ஜிங் சுழற்சிகளை கொண்டுள்ளது. in-box 33W வேகமான சார்ஜருடன் இணைந்து, HMD Fusion உங்கள் நாள் முழுவதும் இணைக்கப்பட்டு, இயக்க நேரத்தைக் குறைத்து, உங்கள் மொபைல் அனுபவத்தை அதிகப்படுத்துகிறது.

HMD இன் இந்தியா மற்றும் APAC இன் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் உப தலைவர் ரவி குன்வார் கருத்துத் தெரிவிக்கையில், "HMD Fusion என்பது உயர் செயல்திறன், தடையற்ற அனுபவம் மற்றும் ஒரே சாதனத்தில் நிலையான புதுமை ஆகியவற்றைத் தேடும் நுகர்வோருக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது உங்கள் வாழ்க்கை முறைக்கு எளிதாக மாற்றியமைக்கப்படுவதால், இதை 'வெறும் ஸ்மார்ட்போன் மட்டுமல்ல' என்று நாங்கள் அழைக்கிறோம். நீங்கள் ஒரு கேமராக இருந்தாலும் சரி அல்லது உள்ளம்சங்களை உருவாக்குபவராக இருந்தாலும் சரி, Fusion உங்களுடன் இணைந்து வியாபிக்கிறது, உங்கள் தேவைகள் மற்றும் ஆர்வங்களுடன் பொருந்தக்கூடிய அதன் 'அவுட்ஃபிட்' ஒரு எளிய மாற்றத்துடன் உருமாறுகிறது. HMD-யில், தொழில்நுட்பத்தை மனிதநேயப்படுத்துவதில் நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோம், நாங்கள் தொடர்ந்தும் அதை மேற்கொள்வோம்." என்றார்.

HMD Fusion-ஐ வேறுபடுத்தும் அங்கங்களாக அதன் 'ஸ்மார்ட் மேலுறைகள்' ஆமைந்துள்ளன. இவை எந்தவொரு சூழ்நிலைக்கும் ஏற்றவாறு சாதனத்தின் திறன்களை உடனடியாக மாற்றும் பரிமாற்றக்கூடிய துணைக்கருவிகள் ஆகும். கேமிங் அவுட்ஃபிட் மேம்பட்ட கேம்ப்ளே கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது, இது இலங்கையின் வேகமாக வளர்ந்து வரும் மொபைல் கேமிங் சமூகத்தின் தேவைகளை நிவர்த்தி செய்கிறது. 'ஃப்ளாஷி அவுட்ஃபிட்' தங்கள் ஸ்மார்ட்போனை ஒரு தனிப்பட்ட ஸ்டைல் அறிவிப்பாக கருதும் பாவனையாளர்களுக்கு உதவுகிறது, தனிப்பட்ட ஆளுமை மற்றும் விருப்பங்களை பிரதிபலிக்கும் தனித்துவமான தனிப்பயனாக்க விருப்பங்களை வழங்குகிறது, அதாவது சரியான செல்ஃபிக்களுக்கான மடிக்கக்கூடிய RGB LED ஃபிளாஷ் வளையம் மற்றும் பல வண்ண சேர்க்கை தெரிவுகள் அடங்கியுள்ளன. HMD இன் வளர்ந்து வரும் ஆசிய சந்தைகளுக்கான பொது முகாமையாளர் விவேக் கந்தெல்வால் கருத்துத் தெரிவிக்கையில், "வளர்ந்து வரும் ஆசிய சந்தைகளில் HMD இன் விரிவாக்கத்துக்கான முக்கிய சந்தையாக இலங்கை அமைந்துள்ளது. தொழினுட்ப ரீதியில் வலிமையான மற்றும் புத்தாக்கமான மொபைல் தீர்வுகளுக்கான ஆர்வம் நிறைந்த மக்களை நாம் காண்கிறோம். பாரம்பரிய தடைகளை தகர்க்கும் சாதனங்களை வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்பின் வெளிப்பாடாக HMD Fusion அமைந்துள்ளதுடன், அதிசிறந்த பெறுமதியையும் வழங்கும். ஸ்மார்ட்ஃபோன் எவ்வாறு அமைந்திருக்கும் என்பதை புதிய முறையில் சிந்திக்கும் அனுபவம் HMD Fusion இனால் வழங்கப்படும்." என்றார்.

புலன் கடந்த புலக்காட்சியில்

# தொலையுணர்வு



நடராசா கோபிராம்,
உளவியல் சிறப்புக்கலை மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்.




உலகின் பல்வேறுபட்ட துறைகளை ஆய்வுக்கு உட்படுத்தியும் தாக்கத்தை ஏற்படுத்தியும் மனித சமுதாயத்திற்கு மிகவும் பயன்படும் ஒரு விஞ்ஞானமாக உளவியல் காணப்படுகின்றது. உளவியல் என்பது பொதுவாக மனித நடத்தையினை ஆய்வு செய்யும் ஒரு விஞ்ஞானமாக கருதப்படுகின்றது. இது நடத்தையை ஆராய்ந்து அறிவதுடன் உள்ளம் அல்லது மனதின் செயற்பாடு பற்றி விளக்குகின்றது. இந்த உளவியல் துறையானது பல்வேறுபட்ட கிளைகளை கொண்டதாக விளங்குகின்றது. சமுதாய உளவியல், குழந்தை உளவியல், கல்வி உளவியல், ராணுவ உளவியல், உயிரியல்பொ உளவியல், விருத்தி உளவியல், ஆற்றுப்படுத்தல் உளவியல் ,கடப்பு உளவியல் என பல்வேறு வகைப்பாடுகளைக் கொண்டு காணப்படுகின்றது. இவற்றுள் 'கடப்பு நிலை உளவியல்' உளவியலில் முக்கியமானதாகக் காணப்படுகின்றது. கடப்பு நிலை உளவியலில் புலன்களைப் பயன்படுத்தாமல் புலக்காட்சி பெற்றுக்கொள்ளும் வகையில் அமைந்த புலன் கடந்த புலக் காட்சி எனும் ஒரு பிரிவு காணப்படுகின்றது.

துவாக உளவியல் மனித மனம் பற்றிய அறிவுத்துறை என்று குறிப்பிடப்படுகின்றது ஆயினும் இந்த கடப்பு நிலை உளவியல் (Para Psychology) அப்பாற்பட்ட மனம் பற்றிய அறிவியலாக விளங்குகின்றது.

இதனை 'அப்பாற்பட்ட உளவியல்' என்றும் 'அதீத உளவியல்' என்றும் அழைக்கின்றனர். மனம் மூலம் சாத்தியப்படும் செயல்களை மனிதனுக்குப் புரியாத மர்ம வித்தைகளை, உள்ளடக்கிய மர்ம விடயமாக, அறிவிக்க அப்பாற்பட்டதாக, புரியாததாக இது உள்ளது. புலன் அங்கங்கள் மற்றும் தொழில் புலன் முதலியன உதவியின்றி செயல் புரியும் மற்றும் காரியங்களை நடாத்தும் மன இயக்கம் ஆகும். இதனையே கடப்பு உளவியல் என்று அழைக்கின்றனர்.

புறச் சூழலில் இருந்து தகவல்களைப் புலன் உறுப்பு மூலம் பெறுகின்றோம். ஒவ்வொரு புலன்களாலும் புலன் உணர்ச்சி உண்டாகிறது. புலன்களால் பெறப்பட்ட தகவல்களை மின் கணத் தாக்காக மாற்றப்பட்டு மூளையில் பெற்றுக்கொள்ளப்பட்டு அந்த தகவல் என்னவென்று அர்த்தம் கூறக்கூடிய செயல்பாடு புலக்காட்சி ஆகும். புலன் உணர்ச்சி எல்லோருக்கும் பொதுவானது ஆனால் அனுபவத்தின் அடிப்படையில் புலக்காட்சி ஆளுக்கு ஆள் வேறுபடும். ஏனெனில் ஒரு பொருளைப் பற்றி, நிகழ்ச்சி பற்றி பலரும் பல கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் பெற்றுக் கொள்ளலாம். புலன்கள் மூலம் ஒரு பொருளை அறியும்போது, அந்த செய்தி நரம்புகள் மூலம் மூளைக்கு எடுத்துச் செல்லப்படும். ஐம்புலன்களில் இருந்து மூளைக்குப் பதிவாகும் உணர்வைப் புலன் உணர்ச்சி என்கிறோம். அச்செய்தி மூளையை அடைந்ததும் மூளை அதற்குப் பொருள் கண்டுபிடிக்கிறது. இதனையே புலக்காட்சி என்கிறோம். எனவே, ஐம்புலன்களால் ஒரு பொருளை உணர்தலே புலக் காட்சி எனப்படுகிறது.

இந்த புலக்காச்சியிலிருந்து மாறுபட்ட ஒன்றாகப் புலன் கடந்த புலக் காட்சி அமைகின்றது. இது அசாதாரண மற்றும் அதீத சக்தி நிலையாகக் கொள்ளப்படுகின்றது. 'உளச்சத்தி ஆராய்ச்சி' என்று அழைக்கப்படும் கடப்பு உளவியல் அசாதாரண விஞ்ஞான ஆற்றலையும், அசாதாரண செயல்களையும், இயல்பாக செய்ய முடியாத செயல்களையும் ஆராயும் ஓர் துறையாகும்.இந்த உளவியலாளர்கள் அசாதாரண செயற்பாடுகளை இரண்டு பிரிவாக பார்க்கின்றனர்.

1. Extra Sensory Perception (ESP)
2. Psychokinesis (உளந்தால் இயங்கியல்)

இந்த அசாதாரண நிலைகளில் ஒன்றான புலன் கடந்த புலக்காட்சி முக்கியமாகக் காணப்படுகிறது. புலன் கடந்த புலக்காட்சி என்பது புலன் உணர்விற்கு அப்பாற்பட்ட ஒன்று ஆகும். இது ஐம்புலன்களால் உணரப்படாத அப்பாற்பட்டது ஆகும்.

இதனை ESP என்றும் அழைப்பர். இதன் விரிவாக்கம் Extra Sensory Perception என குறிப்பிடப்படுகின்றது. சில இடங்களில் Extra Sensory Power என்றும் குறிப்பிடப்படுவது இங்கே அவதானிக்கத்தக்க விடயமாகும். 'அறிவின் வாயில்கள்' என்று அழைக்கப்படும் ஐம்புலன்களின் தொடர்பின்றி இது நிகழ்கின்றது. இதனால் இது 'ஆறாவது உணர்வு' என்றும் அழைக்கப்படுகின்றது. நாம் வழக்கமாக ஐம்புலன்களின் ஊடாகவே தரவுகளைப் பெற்று புலக்காட்சி பெறுகிறோம். அந்த வகையில் புலன்களைப் பயன்படுத்தாமல் சுற்றியுள்ள உலகு பற்றிய தகவல்களைப் பெறும் திறனாகப் புலன் கடந்த புலக்காட்சி உள்ளது. புலன் கடந்த புலக் காட்சி பற்றி கற்பதை அதீத உளவியல் என்றும் அழைக்கிறோம்.

ஜோசப் பான்ஸ் ரைன் என்பவர் Extra Sensory Perception என்ற சொல்லை முதன் முதலில் பிரபல்யப்படுத்தியதுடன் பல பரிசோதனைகளையும் அது தொடர்பாக நடத்தினார்.; அத்தோடு இவரது ஆய்வின் பிரதிபலனாக NewFrontiers Of the Mind என்ற நூலை 1937இல் வெளியிட்டதுடன் அந்நூலிலே Para Psychologyஎன்ற வார்த்தையும் பயன்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஐம்புலன்களைப் பயன்படுத்தாமல் தங்களைச் சுற்றியுள்ள உலகு பற்றிய தகவல்களைப் பெறும் திறனாகவும் அறியப்பட்ட புலன் தரவுகளுக்கு அப்பாற்பட்ட விடயங்களை அனுபவிக்க முடியும் என்பதாகும். மனம் உடலைத் தாண்டி புலன்களின் எல்லையை அவை தாண்டி இயங்குமானால் Para Psychology நடவடிக்கைகள் விளைகின்றன. பௌதீக உலகை ஐந்து விதமாக அறிய முடியும். ஒலியாக, ஒளியாக, மணமாக, சுவையாக மற்றும் தொடுகையாக உலகை அறிய முடியும். ஆனால் புலன் கடந்த புலக்காட்சி அதற்க்கு அப்பாற்பட்ட தன்மையாகக் காணப்படுகின்றது. ESP இனை Second Sight என்றும் அழைக்கின்றனர். புலன் கடந்த புலக்காட்சி பற்றி பல்வேறு சர்ச்சைகள், ஆய்வுகள், கருத்துக்கணிப்புகள் என்பன ஆராய்ச்சியாளர்களிடம் இன்று வரை இடம்பெற்று வருகின்றனர். ஏனெனில் 100% இதனை உண்மை என்றோ அல்லது பொய் என்றோ உறுதிப்படுத்தபடாமை ஆகும்.

புலன் கடந்த புலன் காட்சியைச் சிலர் எல்லோருக்கும் காணப்படும் ஒரு பொதுவான ஒன்றாகக் குறிப்பிடுகின்றனர். சிலர் இதனை ஒரு சிலருக்கு மட்டும் உரித்தான தனிப் பண்பாக விளக்க முற்படுகின்றமையும் இங்கே சுட்டிக்காட்டத்தக்க ஒரு விடயமாகும். இவ்வாறான பல்வேறு கருத்துக்கள் காணப்பட்ட போதிலும் பொதுவாக எல்லோருக்கும் உணர்வுகள் ஏற்பட்டிருப்பதை அறியக்கூடியதாக உள்ளது நாம் ஒருவரை பற்றி நினைக்கும்போது, அவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு அல்லது குறுஞ்செய்தி சில சமயம் வருவது சில சமயம் நேரிலும் வரும் சந்தர்ப்பம் உள்ளது. நாம் ஒருவரைத் தூரத்தில் பார்க்கும்போது கண்முன்னே காட்சியளிப்பது, ஒரு இடத்திற்கு செல்லும் போது முன்பே அங்கு வந்தது போன்ற அனுபவம், காட்சி ஏற்படுதல் போன்ற பலவற்றைக் கூறலாம். இவற்றைப் புலன் கடந்த புலக்காட்சிகளாக கூற முடியும்.

புலன் கடந்த புலக்காட்சி பல்வேறு வகையாக விளங்குகின்றன அவற்றுள் பிரதானமாக

தொலை உணர்வு(Telepathy)
முன்னறிதல் (Precognition)
பின்னோக்கி அறிதல் (Retro cognition)
மனக்கண் காட்சி (Clairvoyance)
ஆவிகளுடன் பேசல் (Mediumship)
பொருள் பற்றி அறிதல் (Psychometry)
தெளிவுத்திறன் (Clairavdience)
போன்றவை முக்கியமானவையாக விளங்குகின்றன .

இவை தவிர Apporation (மறையச் செய்தல்), Aura Reading (மனிதனை சுற்றியுள்ள ஒலி அலைகளைக் காணல்), Automatic writting (பிற சக்தியின் உதவியுடன் எழுதுதல்), Biolocation(ஒரே நேரத்தில் பல இடங்களில் இருத்தல்), Extra smelling (அதீதம் மணத்தினை அறியும் திறன்), Extra sence of Testing (அதீத சுவையுணர்வு), Extra Sence of touching(அதீத தொடுகை உணர்வு) முதலிய பல்வேறுபட்ட புலன் கடந்த புலன் காட்சிகள் கடப்பாட்டு உளவியலில் காணப்படுகின்றன.

அவற்றுள் பிரதானமான முக்கியத்துவம் மிக்க ஒரு புலன் கடந்த புலன் காட்சி வகையாக 'தொலைவுணர்வு' என்பது காணப்படுகின்றது.

ஒரு மனதிலிருந்து இன்னொரு மனதுடன் தொடர்பு கொள்வதைக் குறிக்கும். எமது மனதில் உள்ள எண்ணங்கள் சிந்தனைகள் எவ்வித தொடர்பான அமைப்புமின்றி மற்றவர்களுக்கும் மற்றவரின் எண்ணங்கள் சிந்தனைகள் தொடர்பான அமைப்பு இன்றி நாமும் புலக்காட்சி செய்யும் திறமையாகும்.இது தனியே இருவருக்கிடையே மட்டுமல்லாமல் பேச்சு, உடல் மொழி,எழுத்து பிற தனிப்பட்ட வழிகளைப் பயன்படுத்தாமல் இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட மனங்களை நேரடி தொடர்பு கொள்ளும் திறனாகவும் விளக்கப்படுகிறது.
F.W. H.Myers என்பவர் ஒரு மனதில் இருந்து பெற்றதிற்குப் புலன்கள் உதவி இன்றி அனுப்புதல் எனவும் எண்ணப் பரிமாற்றம் எனக் குறிப்பிட்டது மற்றுமன்றி, 1882இல் ஒரு நபர் ஒன்றுக்கும் மேற்பட்ட நபருடன் தங்கள் மனதைப் பயன்படுத்தி தொடர்பாட முடியும் என்கிறார்.

கிரேக்க சொல்லிலிருந்து தோன்றிய இச்சொல் Tele- தூரம் என்றும் Pathio- உணர்வு என்று பொருள்படுகிறது. டெலிபதி என்பது தூர உணர்வு என்றும் தொலை உணர்வு என்றும் குறிப்பிடப்படுகின்றது. இங்கு அறிவு கடத்தப்படும் அதாவது ஒருவர் தம் மனதில் இருக்கும் கருத்தைத் தான் நினைப்பதை அடுத்தவர் மனதிற்கு அனுப்புகிறார்.

அதை அவர் அப்படியே புரிந்து கொண்டால் அதை டெலிபதி எனலாம். இதில் இரண்டு மனம் சம்பந்தப்பட்டிருக்கும். அனுப்புபவர், பெறுபவர் முதலான இருவரின் மனமும் சம்பந்தப்பட்டதாக இருக்கும். மனம் மூலம் செய்தி அனுப்புவதால் 'மானசதந்தி' எனவும் குறிப்பிடுகின்றன. இதில் இடம் தொடர்பாக அருகிலோ அல்லது தூரமோ என்ற கருத்து இல்லை. நேரம் எவ்வளவு என்பதும் தேவையில்லை ஒருவர் கருத்தை அனுப்பியதுமே அது யாருக்கு அனுப்பப்பட்டதோ அவர் உடனே புரிந்து கொண்டுவிடுகிறார். இது ஒரு மானசீக வேலையாகக் கருதப்படுகின்றது. Mind of the matterஎன்பது தெளிவாகின்றது. லாப்லொங்ரம்ப்பா எழுதிய 'மூன்றாம் கண்' என்ற நூலில் ஓரிடத்தில் சென்றால் புதுப்புது எண்ணங்கள் உண்டாக்கப்படும் என குறிப்பிட்டுள்ளார். இது ஓர் டெலிபதி சார்ந்த சம்பவமாகவும் குறிப்பிடுகின்றார். பழங்காலத்தில் முனிவர்கள் யோகிகள் போன்றோர் தங்களுடைய குருவிடம் இருந்து இந்த சக்தி மூலமாக அறிவும் ஞானமும் பெற்றிருந்தமை நாம் புராணக் கதைகள் சமய நூல்கள் முதலானவற்றின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

(செவ்வாய்க்கிழமை தொடரும்)

3 நாட்டுத் தலைவர்கள் சந்திப்பு

# அமெரிக்காவிற்கு எதிராக புது கூட்டணி?



அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் நடவடிக்கைகள் உலகளவில் அதிர்வுகளை ஏற்படுத்திய நிலையில், இந்தியா, சீனா, ரஷ்யா தலைவர்கள் சந்திக்க உள்ளனர். இந்த சந்திப்பு, அமெரிக்காவிற்கு எதிரான புதிய கூட்டணியை உருவாக்கும் முயற்சியாக பார்க்கப்படுகிறது. டியான்ஜின் நகரில் நடைபெறும் இந்த மாநாட்டில், உலகளாவிய பொருளாதார மாற்றங்களை எதிர்கொள்ளும் திட்டங்கள் விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் கடந்த ஜனவரி 20ஆம் தேதி பதவியேற்ற பிறகு எடுத்து வரும் நடவடிக்கைகள் அந்நாட்டு மக்களை மட்டுமல்லாமல் ஆப்பிரிக்க ஏழைகளில் இருந்து சீனா, இந்தியா போன்ற நாடுகளின் ஏற்றுமதி வரை பல தளங்களிலும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. நாடுகளுக்கு இடையில் நடைபெறும் போர்களிலும் ட்ரம்ப்பின் தலையீடு பேசுபொருளாகியுள்ளது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதியின் அதிரடி நகர்வுகளால் அதிகம் பாதிக்கப்படும் இந்தியா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளின் தலைவர்கள் சில நாட்களில் சந்திக்க உள்ளனர். டியான்ஜின் நகரில் நடக்க உள்ள ஸ்கோ எனப்படும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு நாடுகளின் கூட்டத்திற்கிடையே இச்சந்திப்பு நிகழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாறி வரும் உலக சூழலில் இந்தியா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகள் இணைந்து செயல்பட வேண்டும் என அண்மையில் ரஷ்ய வெளியுறவுத் துறை அமைச்சர் லாவ்ரோவ் அண்மையில் கூறியிருந்தார். இந்த மாநாட்டை அமெரிக்காவிற்கு எதிரான உலகளாவிய தளத்தை கட்டமைக்கும் களமாக சீன ஜனாதிபதி உலகிற்கு வெளிப்படுத்துவார் என அந்நாட்டு ஊடகங்கள் கூறியுள்ளன.

குறிப்பாக அமெரிக்க டாலரின் ஆதிக்கத்தை முறியடிக்க இந்தியா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளை கொண்ட பிரிக்ஸ் அமைப்பு முயற்சிப்பதாக ட்ரம்ப் கருதும் நிலையிலும் அம்மூன்று நாட்டு தலைவர்கள் சந்திப்பு கவனம் பெறுகிறது.

கலிபோர்னியா

பிரித்தானியாவில்

## நீதி வேண்டி ஆர்ப்பாட்டம்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட இலங்கைத் தமிழருக்கு நீதி வேண்டி மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் மற்றும் ஊர்வலம் பிரித்தானியாவின் லண்டன் நகரில் சனிக்கிழமை (30) அன்று நடைபெற்றது.

புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்களினால் சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தினமான சனிக்கிழமை(30) அன்று ஏற்பாடு செய்யப்பட்ட கவனயீர்ப்பு பேரணி பிரித்தானியா - ஸ்ரீலங்கா உயர்ஸ்தானிகர்கத்தில் இருந்து ஆரம்பமாகி பிரித்தானிய பிரதமர் பணிமனை வரை சென்று




பணிமனை முன்பாக தமது கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.


லிஸ்பன்

## "ட்ரம்ப் ஒரு ரஷ்ய ஆதரவாளர்"

"அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளிப்படையாக ரஷ்யாவின் ஆதரவாளராக செயல்படுகிறார்" என போர்த்துக்கல் ஜனாதிபதி மார்செலோ ரெபெலோ டிசோசா குற்றஞ்சாட்டியுள்ளார்.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன், சர்வதேச இராணுவ அமைப்பான, 'நேட்டோ'வில் இணைய முயற்சித்தது. இது தங்களுக்கு அச்சுறுத்தல் என கூறி, உக்ரைன் மீது 2022இல் ரஷ்யா போர் தொடர்ந்தது. இந்த போரை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் முயற்சித்து வருகிறார்.

இது தொடர்பாக ரஷ்ய ஜனாதிபதி புட்டினுடன் மற்றும்



உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி, ஐரோப்பிய யூனியன் நாடுகளின் தலைவர்களையும் ஜனாதிபதி ட்ரம்ப் சந்தித்து பேசினார்.

இந்நிலையில், 'நேட்டோ'வில் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய நாடான போர்த்துக்கலின் ஜனாதிபதி மார்செலோ ரெபெலோ, பல்கலை நிகழ்ச்சி ஒன்றில் பேசியதாவது:

உலகின் மிகப்பெரிய வல்லரசு நாடான அமெரிக்காவின் ஜனாதிபதி ட்ரம்ப் பாரபட்சமின்றி ரஷ்யாவின் கருவியாக இருக்கிறார். அவர் ரஷ்யாவை வெளிப்படையாக ஆதரிக்கிறார்.

இதனால், பாரம்பரியமாக அமெரிக்காவுடன் கூட்டாளிகளாக இருந்த உக்ரைன் மற்றும் ஐரோப்பிய நாடுகள், தற்போது தங்கள் நலன்களைப் பாதுகாக்க அழுத்தம் தரவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன. ஜனாதிபதி ட்ரம்ப் ஒரு தரப்புடன் மட்டுமே பேச்சு நடத்த விரும்புகிறார்.


ஸ்ரீநகர்

காஷ்மீரில் மீண்டும் மேகவெடிப்பால் கனமழை:

## வீடுகள் இடிந்து 11 பேர் மரணம்

காஷ்மீர் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக அடுத்தடுத்த மேக வெடிப்பினால் கனமழை கொட்டி வருகிறது. இடைவிடாமல் பெய்து வரும் மழையால் பல இடங்களில் மண்சரிவும், கடுமையான வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கி போயுள்ளது. காஷ்மீர் ரியாசி மற்றும் ராம்பன் மாவட்டங்களில் ஞாயிற்றுக்கிழமை (30) மாலை அன்று மீண்டும் மேக வெடிப்பால் மழை வெளுத்துவாங்கியது.

ரியாசி மஹோர் பகுதியில் உள்ள பத்தார் கிராமத்தில் மண்சரிவில் பல வீடுகள் மண்ணுக்குள் புதைந்தது. ஏராளமான வீடுகள் சேதமடைந்தது. இந்த மண்சரிவில் சிக்கி நசீர் அகமது, அவரது மனைவி மற்றும் 5 குழந்தைகள் பரிதாபமாக இறந்தனர். ராம்பன் மாவட்டம் ராஜ்புரா கிராமத்தில் ஒரு பள்ளி வெள்ளத்தில்



சேதமடைந்தது. வெள்ளத்தில் சிக்கி 2 பெண்கள் உள்பட 3 பேர் இறந்தனர். மேலும் 5 பேரை காணவில்லை.

அவர்களை தேடும் பணி நடந்து வருகிறது. ஒரே நாளில் மட்டும் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

தேசிய நெடுஞ்சாலைகள் கடுமையாக சேதமடைந்ததால் ஜம்மு-ஸ்ரீநகர் வீதி தொடர்ந்து மூடப்பட்டு உள்ளது. இதனால் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு-கத்ரா இடையே ரெயில் சேவை 5ஆவது நாளாக ரத்து செய்யப்பட்டு உள்ளது. பூஞ்ச், கிஷ்த்வார், ஜம்மு, உதம்பூர், ராம்பன் உள்ளிட்ட மாவட்டங்களில் இன்று திங்கட்கிழமை (01) அதிகனமழை பெய்யும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முத்தரப்புத் தொடர்

# அமீரகத்தை வென்றது பாகிஸ்தான்



ஆப்கானிஸ்தான் பங்கேற்கும் முத்தரப்பு இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரில், ஷாஜாவில் சனிக்கிழமை(30) அன்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் ஐக்கிய அரபு அமீரகத்தை பாகிஸ்தான் வென்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், சைம் அயூப்பின் 69 (38), ஹஸன் நவாஸின் 56 (26), மொஹமட் நவாஸின் 25 (15), பஹீம் அஷ்ரஃப்பின் 16 (10) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் ஹைதர் அலி 4-0-32-2 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 208 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஐ.அ. அமீரகம் சார்பாக ஆசிஃப் கான் 77 (35), முஹமட் வஸீம் 33 (18) ஓட்டங்களைப் பெற்றபோதும் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்களையே பெற்று 31 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில் நவாஸ் 4-0-21-2, அயூப் 2-0-6-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக அயூப் தெரிவானார்.

இன்றிரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ஆப்கானிஸ்தானை ஐ.அ. அமீரகம் எதிர்கொள்ளவுள்ளது.

முதலாவது போட்டியில்

# பங்களாதேஷை வீழ்த்திய நெதர்லாந்து

நெதர்லாந்துக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், சியல்ஹெட்டில் சனிக்கிழமை(30) நடைபெற்ற முதலாவது போட்டியில் பங்களாதேஷ் வென்றது.

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

நெதர்லாந்து: 136/8 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: தெஜா நிடமனுரு 26 (26), மக்ஸ் ஓ டௌட் 23 (15), டிம் பிறிங்கிள் 16 (14), ஷரிஸ் அஹ்மட் 15 (14), அர்யன் டுட் ஆ.இ 13 (08), ஸ்கொட் எட்வேட்ஸ் 12 (07) ஓட்டங்கள். பந்துவீச்சு: தஸ்கின் அஹ்மட் 4/28 [4], சைஃப் ஹஸன் 2/18 [2], முஸ்தபிசூர் ரஹ்மான் 1/19 [4], மஹெடி ஹஸன் 0/21 [4], ஷொரிஃபுல் இஸ்லாம் 0/30 [4], ரிஷாட் ஹொஸைன் 0/16 [2])




பங்களாதேஷ்: 138/2 (13.3 ஓவ.) (துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் ஆ.இ 54 (29), சைஃப் ஹஸன் ஆ.இ 36 (19), தன்ஸிட் ஹஸன் 29 (24), பர்வீஸ் ஹொஸைன் எமொன் 15 (09) ஓட்டங்கள். பந்துவீச்சு: டிம் பிறிங்கிள் 1/16 [2], அர்யன் டுட் 1/30 [3])

போட்டியின் நாயகன்: தஸ்கின் அஹ்மட்

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்று பிற்பகல் 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ராஜஸ்தான் றோயல்ஸிலிருந்து

## விலகினார் ட்ராவிட்



இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்.) ராஜஸ்தான் றோயல்ஸின் தலைமைப் பயிற்றுவிப்பாளர் பதவியானது ஒரு பருவகாலத்துடன் முடிவுக்கு வந்துள்ளது.

ட்ராவிட்டுக்கு பரந்தளவிலான பொறுப்பு வழங்கப்பட்டதாகவும், ஆனால், அதை அவர் எடுத்துக் கொள்ளவில்லையென அறிக்கையொன்றில் சனிக்கிழமை (30) றோயல்ஸ் தெரிவித்துள்ளது.

ஐ.பி.எல். 2025இல் ஒன்பதாமிடத்தையே றோயல்ஸ் பெற்றிருந்தது.

இங்கிலாந்து பிறீமியர் லீக்

## போர்ண்மெத்திடம் தோற்ற டொட்டென்ஹாம்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் சனிக்கிழமை (30) நடைபெற்ற போர்ண்மெத்துடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர் தோற்றது.

போர்ண்மெத் சார்பாகப் பெறப்பட்ட கோலை இவானில்சன் பெற்றிருந்தார்.

இதேவேளை லீட்ஸ் யுனைட்டெட்டின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், நியூகாசில் யுனைட்டெட்டுக்குமிடையிலான போட்டியானது 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இந்நிலையில், வொல்வர்ஹம்ப்டன் வொன்டரேர்ஸின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் எவெர்ற்றன் வென்றது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 01, செப்டெம்பர் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.